# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

**අංක 11,839 — 1959 අගෝස්තු 25 වැනි අඟහරුවාද — 25.8.1959**

11,839 ம் இலக்கம்— 1959 ம் ஆண்டு ஆவணி மாதம் 25 ந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## அறிவித்தல்கள்

### 1950 ம் ஆண்டின் 25 ம் இலக்க உணவுக் கட்டுப்பாட்டுச் சட்டம்

### கட்டளை இலக்கம் 131

1950 ம் ஆண்டின் 25 ம் இலக்க உணவுக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 (1) (i) ம் பிரிவினுல் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு, சொலமன் வெஸ்ட் றிஜ்வே டயஸ் பண்டாரநாயக்கா, பாதுகாப்பு, வெளிவிவகார அலுவல்கள் அமைச்சர் ஆகிய யான் இக்கட்டளையால் எத்தொகையான மாசினையும் (எல்லா ரகங்களும்) இலங்கையின் எவ்வொரு-இடத்திலிருந்தோ வேறு எவ்விடங்களுக்கோ, உணவுக் கட்டுப்பாட்டதிகாரியால் அல்லது அவர் சார்பில் முன்னர் குறிப்பிட்ட இடத்தைச் சேர்ந்த அல்லது அவ்வட்டாரத்தைச் சேர்ந்த பிரதி உணவுக் கட்டுப்பாட்டதிகாரியால் அல்லது உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரியால் வழங்கப்பட்ட உத்தரவின் பேரிலும் அவ்வுத்தரவுச் சீட்டில் குறித்துள்ள நிபந்தனைகளின் பேரிலுமேயன்றி கொண்டு செல்லவொ அல்லது எடுத்துச் செல்லவோ கூடாது எனத் தடை விதிக்கிறேன்.

மேற்காணும் கட்டளையின் நிபந்தனைகள் பின்வருவனவற்றிற்குப் பிரயோகிக்கப்படமாட்டாது—

(அ) இலங்கை அரசாங்கத்தின் சார்பாக எவ்வொருவரோ கொண்டு செல்லும் அல்லது எடுத்துச் செல்லும் மாசி ;

(ஆ) உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரியின் நிர்மாணப்படி தனது நீதி முறையான பங்கீட்டைப் பெற்ற தனது பங்கு மாசியைக் கொள்வனவு செய்யுமிடத்திலிருந்து பாவனையாளரின் வசிப்பிடத்திற்குக் கொண்டுசெல்லல் அல்லது எடுத்துச் செல்லல்;

(இ) உப உணவுக் கட்டுப்பாட்டதிகாரியால் அல்லது அவரது சார்பில் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டை அல்லது உத்தரவுச் சீட்டை அல்லது மொத்த வியாபாரியால் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டைக் கொண்டு செல்பவரும், குறித்த பற்றுச சீட்டில் அல்லது உத்தரவுச் சீட்டில் குறிப்பிட்டுள்ள தொகையைக் கொண்ட மாசியை உத்தரவுச் சீட்டில் குறிப்பிட்டுள்ள இடத்திற்கு, பெற்றுக் கொண்ட இடத்திலிருந்து தனது பண்டசாலைக்கு அல்லது வியாபார நிலையத்திற்கு, கூட்டுறவுப் பண்டசாலைக்கு அல்லது அதிகாரம் பெற்ற வியாபாரியின் ஸ்தாபனத்துக்குக் கொண்டு செல்வது அல்லது எடுத்துச் செல்வது.

மேற்காணும் (இ) என்னும் தலைப்பில் உள்ள " மொத்த வியாபாரி " என்பது கூட்டுறவு மொத்த ஸ்தாபனம், 1949 ம் ஆண்டின் 21 ம் இலக்க சட்டத்தினுல் திருத்தியமைக்கப்பட்ட 1936 ம் ஆண்டின் 16 ம் இலக்க கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தின் 6 ம் பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுப் பண்டசாலைச் சமாசங்கள் அல்லது 1952 ம் ஆண்டின் உணவுக் கட்டுப்பாட்டுப் பிரமாணங்களின் " ஈ " தலைப்பின் III ம் பாகத்தின் 5 ம் பிரமாணத்தின் கீழ் பிரதி உணவுக் கட்டுப்பாட்டதிகாரியால் அல்லது உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரியால் கூட்டுறவுப் பண்டசாலைகளுக்கு அல்லது கூட்டுறவுக் கடைகளுக்கு அல்லது அதிகாரம் பெற்ற விநியோகஸ்தர்களுக்கு எவ்வித கட்டுப்பாட்டுப் பொருட்களையும் வழங்குவதற்கென அதிகாரம் அளிக்கப்பட்ட தகுதி யுடையவரும் தகைமை வாய்ந்தவருமான ஒருவருமாகும்.

மேற்காணும் (இ) என்னும் தலைப்பிலுள்ள " அதிகாரம் பெற்ற வியாபாரி " என்பது 1952 ம் ஆண்டின் உணவுக் கட்டுப்பாட்டுப் பிரமாணங்களின் " ஈ " தலைப்பின் III ம் பாகத்தின் 5 ம் பிரமாணத்தின் கீழ் பிரதி உணவுக் கட்டுப்பாட்டதிகாரியால் அல்லது உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரியால் அதிகாரம் அளிக்கப்பட்ட ஒரு வியாபாரியோ அல்லது தகுதியுடையவரும் தகைமை வாய்ந்தவருமான ஒருவராகும்.

எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்க,
பாதுகாப்பு, வெளிவிவகார அலுவல்கள்
அமைச்சர்.

கொழும்பு,
1959 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25 ந் திகதி.

## 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவின் 7 ம் உப பிரிவினால் கீழ்காணும் அட்டவணையிலுள்ள கட்டளைகள் என்னால் அங்கீகரிக்கப்பட்டவையென இத்தால் அறிவித்தல் கொடுக்கிறேன்.

எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்க,
பிரதம மந்திரியும் பாதுகாப்பு வெளிநாட்டு
அலுவல்கள் அமைச்சரும்.

கொழும்பு,
1959 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25 ந் உ.

### அட்டவணை

| கட்டளையிட்ட திகதி | கட்டளையிடுவதற்கு யாரால் அதிகாரம் வழங்கப்பட்டது | எப்பொருளுக்குக் கட்டளை சேர்மதியானது | எவ்வர்த்தமானப் பத்திரிகையில் கட்டளை பிரசுரிக்கப்பட்டது |
|---|---|---|---|
| 23.3.59 .. | யாழ்ப்பாண மாவட்ட உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) | பழுப்புச்சீனி .. | 28.3.59 ந் திகதியைக்கொண்ட 11,711 ம் இல. |
| 23.3.59 .. | ஷை .. | சுத்தமாக்கப்பட்ட வெள்ளைச்சீனி | 28.3.59 ந் திகதியைக்கொண்ட 11,711 ம் இல. |
| 15.5.59 .. | மட்டக்களப்பு மாவட்ட பிரதி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) | சீனி .. | 25.5.59 ந் திகதியைக்கொண்ட 11,749 ம் இல. |
| 19.5.59 .. | அம்பாந்தோட்டை மாவட்ட பிரதி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) | சீனி .. | 29.5.59 ந் திகதியைக்கொண்ட 11,753 ம் இல. |
| 19.5.59 .. | ஷை .. | சீனி .. | 29.5.59 ந் திகதியைக்கொண்ட 11,753 ம் இல. |
| 24.6.59 .. | ஷை .. | அரிசி .. | 1.7.59 ந் திகதியைக்கொண்ட 11,795 ம் இல. |
| 25.5.59 .. | புத்தளம் மாவட்ட உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு) .. | அரிசியும் நெல்லும் | 29.5.59 ந் திகதியைக்கொண்ட 11,753 ம் இல. |
| 1.6.59 .. | இரத்தினபுரி மாவட்ட உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு) | அரிசி .. | 5.6.59 ந் திகதியைக்கொண்ட 11,764 ம் இல. |
| 22.6.59 .. | ஷை .. | அரிசி .. | 26.6.59 ந் திகதியைக்கொண்ட 11,790 ம் இல. |
| 13.6.59 .. | கொழும்பு மாவட்ட உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு) .. | அரிசி .. | 15.6.59 ந் திகதியைக்கொண்ட 11,775 ம் இல. |
| 12.6.59 .. | குருணாகல் மாவட்ட உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு) .. | அரிசி .. | 17.6.59 ந் திகதியைக்கொண்ட 11,777 ம் இல. |
| 12.6.59 .. | ஷை .. | அரிசி .. | 17.6.59 ந் திகதியைக்கொண்ட 11,777 ம் இல. |
| 18.6.59 .. | காலி மாவட்ட உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) .. | அரிசி .. | 24.6.59 ந் திகதியைக்கொண்ட 11,782 ம் இல. |
| 15.6.59 .. | நுவரெலியா மாவட்ட உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) | அரிசி .. | 24.6.59 ந் திகதியைக் கொண்ட 11,782 ம் இல. |
| 18.6.59 .. | கேகாலை மாவட்ட உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) .. | அரிசியும் நெல்லும் | 26.6.59 ந் திகதியைக்கொண்ட 11,790 ம் இல. |
| 22.6.59 .. | மாத்தறை மாவட்ட உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) .. | அரிசி .. | 26.6.59 ந் திகதியைக்கொண்ட 11,790 ம் இல. |
| 14.6.59 .. | களுத்துறை மாவட்ட உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) | அரிசி .. | 29.6.59 ந் திகதியைக்கொண்ட 11,792 ம் இல. |
| 16.6.59 .. | வவனியா மாவட்ட உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) .. | அரிசி .. | 3.7.59 ந் திகதியைக்கொண்ட 11,797 ம் இல. |
| 16.6.59 .. | ஷை .. | பெக்மி அரிசி (புறியாணி) | 3.7.59 ந் திகதியைக்கொண்ட 11,797 ம் இல. |
| 15.6.59 .. | பொலன்னறுவை மாவட்ட உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு) | அரிசி .. | 6.7.59 ந் திகதியைக்கொண்ட 11,800 ம் இல. |

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது